# இனக்குழு ஆட்சி

படகுச் சமுதாயத்தில் இன்று திருமண உறவிற்காகப் பதினைந்து பிரிவுகள் உள்ளன. ஒரு பிரிவினைச் சார்ந்தவர்கள் அனைவரும் ஒரு ஹெத்தப்பன் (முன்னோன்) வழிவந்தவர்கள் ஆகையால் ஒரு பிரிவினைச் சேர்ந்தவர்கள் அனைவரும் அண்ணன், தம்பி; அக்கா, தங்கை; அப்பா, அம்மா; பாட்டன், பாட்டி; மகன், மகள்; பேரன், பேத்தி ஆகிய உறவுமுறையாளர்கள் ஆகிறார்கள். அவ்வாறு இருக்கும்போது ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களுக்குள் திருமண உறவு வைத்துக்கொள்ள இடம் இல்லை. ஒருவன் தான் சார்ந்த பிரிவல்லாத வேறு ஏதாவது ஒரு பிரிவிலிருந்து திருமணம் செய்துகொள்ள இடம் உண்டு. அதாவது ஒருவன் / ஒருத்தி தான் சார்ந்த பிரிவல்லாத மற்ற பதினான்கு பிரிவுகளிலிருந்து திருமணம் செய்துகொள்ளலாம்.

ஒருவன் / ஒருத்தி  தான் சார்ந்த பிரிவினரை அண்ணா, தம்மா; அக்கா, அம்மெ; அப்பா, அவ்வெ: அய்யா, எத்தெ; 0தொ0ட்0டப்பா, 0தொ0ட்0டவ்வெ; குந்நப்பா, குந்நவ்வெ அல்லது ஆலப்பா, ஆலவ்வெ; மாத்தி, எண்ணு என்னும் உறவுப் பெயர்களைச் சொல்லி அழைக்க வேண்டும்.  ஒருவன் / ஒருத்தி தான் சார்ந்த பிரிவல்லாத பிரிவினரை மம்ம, மம்மி; 0பாமய்த அல்லது 0பாவ, 0பாமய்தி; அத்திகெ, சொசெ; 0கண்ட, எண்டரு அளிய (அய்ய) அல்லது அய்ய0பெட்ட என்னும் உறவுப்பெயரைச் சொல்லி அழைக்க வேண்டும். அய்யா, எத்தெ என்பன தான் சார்ந்த பிரிவினரையும் பிற பிரிவினரையும் அழைக்கும் பொது உறவுமுறைப்பெயர்களாக உள்ளன.

ஓர் அட்டிக்கு 0கொத்துகார என்ற ஓர் ஊர்த்தலைவர் இருப்பார். ஊருக்கு 0கவுண்டிக்கெ என்ற தலைவரும் சமுதாய முழுமைக்கும் 0கவுட என்ற ஒரு தலைவரும் இருப்பார். ஊர்த்தலைவர் பிற பெரியோர் உதவியுடன் வழக்குகளைத் தீர்த்து வைப்பார். ஓர் அட்டியில் ஒன்றுக்கும் மேற்பட்ட குடும்புகள் இருக்கும். ஒரு குடும்புவில் பல குடும்பங்கள் இருக்கும். ஒரு

குடும்பத்தில் கருத்துமுரண்பாடு காரணமாக ஏற்படும் வழக்குகள் அது சார்ந்த குடும்புக்கு வரும். குடும்புவில் வழக்கு தீர வில்லை என்றால் அட்டிக்கு வரும் அட்டியில் தீரவில்லை என்றால் அண்டை அட்டிகள் சேர்ந்த ஆறு ஊர் மன்றத்திற்கு வரும் அங்கும் தீரவில்லை என்றால் பத்தொன்பது ஊர் மன்றத்திற்கு வரும். இறுதியாக நாக்கு 0பெட்ட மன்றத்திற்கு வரும். இவ்வகை அமைப்பிலே இனக்குழு ஆட்சி நடந்து வந்துள்ளது. இன்றைய நிலையில் வழக்குகள் எல்லாம் எடுத்த எடுப்பிலேயே வழக்கு மன்றத்திற்குப் போய் விடுகின்றன. ஆக வழக்குத் தொடர்பான வற்றில் சமுதாயத்தின் பங்கு ஏறக்குறைய முற்றிலும் இல்லாமலாகி விடுகின்றது.

படகுச் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் மரபிற்கு முதலிடம் உண்டு. ஆனால் சூழல் காரணங்களால் பழம் மரபினைப் பின்பற்றுவதில் அவ்வப்போது நெகிழ்ச்சி கண்டு வருகிறது. இந் நிலையில், தேவையான போது, பழம் மரபு அவ்வப்போது மாற்றம் பெற்றுச் சூழலுக்குத் தன்னை ஏற்றதாக ஆக்கி வருகிறது. என்றாலும், இதுவரை பழம் மரபு தன் அடையாளத்தை முற்றிலுமாக இழந்து விடாமல் நிலைத்து வருகிறது. இது இதன் தனிச்சிறப்பு. படகுச் சமுதாயத்தைப் பொறுத்த வரையில் பண்டிகைத் தொடர்பாகப் பொதுவில் நடத்தும் நிகழ்ச்சிகளே ஊரிலுள்ள அனைவரும் பங்கேற்கும் நிகழ்ச்சிகள். இதை அடுத்து இறப்புச் சடங்கு பலர் பங்குகொள்ளும் பொதுத்தன்மை பெறுகிறது. திருமணம் போன்றவற்றில் பலர், குறிப்பாகப் பங்காளிகள் பங்கேற்பது உண்டு. என்றாலும் அவை அனைத்தும் தனியார் விழாவாக அமைந்து விடுகின்றன. பொதுவில் நடப்பதான பண்டிகைத் தொடர்பாகப் பல நேரங்களில் கருத்து முரண்பாடு தோன்றி விடுகிறது. அதனால் பண்டிகை தொடர்பானவற்றில் கருத்து வேறுபாடு தோன்றாவகையில் தொடக்க முதலே விழிப்பாக இருக்கவேண்டியது அவசியம்.

அடிப்படையில் படகர் பண்டிகைகள் முன்னோர் வழிபாட்டின் பாற்பட்டவை. இவை எளிமையாகக் கொண்டாடப் படுவன. பண்டிகைத் தொடர்பான கருத்து முரண்பாடு தோன்றிய இடங்களை வரிசைப்படுத்திப் பார்த்தால், பெரும்பான்மை அங்கெல்லாம் விமரிசையாகக் கொண்டாடும் வகையில் தோன்றியனவாக இருப்பதைக் காணலாம். அதேபோல் கோயில் கட்டுவதற்காக வசூலிக்கும் பணத்தில் நடந்துள்ள முறைகேடும் பரவலாகக் காணப்படுகிறது. ஆகையால் எளிமையோடு கூடிய மரபினைப் பின்பற்றுவது கருத்து முரண்பாடுகள் தோன்றுவதைப் பெருமளவில் தவிர்க்கும்.

படகுச் சமுதாயம் ஓர் பழங்குடி சமுதாயம். இங்குப் புராண வடிப்படையில் உருவான வழிபாட்டு முறை ஒரு சிறிதும் இல்லை. ஓரளவிற்காவது நம் வரலாற்றினை நாம் அறிந்துகொள்ள வேண்டும். நம் பண்டிகைகள் அனைத்தும் தொழிலோடு தொடர்புப் பட்டனவாக இருக்கின்றன. அவ்வகையில் அவை இயல்பாக நம் பண்பாட்டிற்கு ஏற்பனவாக அமைந்து விடுகின்றன. இது வல்லாமல் பிற இடங்களில் நடக்கும் பண்டிகைகளைப் பார்த்து அவற்றைப் போல் விமரிசையாக நடத்த முயல்வது நம் பண்பாட்டோடு ஒட்டாததாக இருக்கும். அவற்றை நடத்த கூடுதல் அலைச்சல் மேற்கொள்ள வேண்டி இருக்கும்.

ஓர் அட்டியில் நடத்தும் பண்டிகைகள் அனைத்தும் அவ் வட்டி சார்ந்த ஊரில் நடப்பன வற்றை ஒட்டியே அமைய வேண்டியதை மரபு உறுதியாக வலியுறுத்துகிறது. இதற்குக் கட்டுப்பட்டு அட்டிகளில் பண்டிகைகள் நடத்தப்பட வேண்டும். ஓர் அட்டி அது சார்ந்த ஊரில் மரபாக நடப்பவற்றிற்கே முன்னுரிமை அளிக்கவேண்டும். புதியதாக உருவாக்க நினைப்பது எதுவும் உறுதியாகக் காலூன்றாது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

படகு அட்டிகள் அனைத்தும் பதினைந்து எத்தப்பன்கள் அமைத்த ஊர் வழி உருவாயின. அவையாவன : 1. தொதநாடு, 2. மேக்குநாடு, 3. பொரங்காடு, 4. குந்தெ (கேத்தி, பூசெகுன்னூரு), 5.

ஜக்கநாரெ, 6. ஜக்கத, 7. தூடெகுய்யி, 8. சோலூரு, 9. உலிக்கல்லு, 10. ஒந்நதலெ, 11. தாம்பட்டி, 12. கக்குச்சி, 13. ஆருவரு, 14. அதிக்கரி, 15. கணக்கரு. இந்தப் பதினைந்து ஊர்களே மூல அக்க பக்காக்கள் அமைந்தவை. அக்க பக்கா என்பது பொதுவில் தவச விளைச்சலைக் குவித்துப் பங்கிடும் முதன்மைப் பணியில் உருவானது. இது ஊர் என்னும் தகுதிப்பாட்டிற்குரிய அடையாளம். இயற்கைப் பேரிடர், சடங்காற்று வதற்குச் செல்லும் வசதிக்குறைவு போன்றன காரணமாகப் புதுப்புது அக்க பக்காக்கள் உருவாகியன. அவ்வகையில் ஒரு காலக்கட்டத்தில் படகுச் சமுதாயத்தில் முப்பத் தைந்துக்கும் மேற்பட்ட அக்க பக்காகள் உருவாகியுள்ளன. அவையாவன :

1.தாந்த நாடு, 2. உப்பதலெ, 3. ஜக்கத, 4. கோடமலெ, 5. பந்திமெ, 6. பெத்துவ, 7. ஜக்கனாரெ, 8. சக்கத்த, 9. மீதேநு, 10. நிருகுவ, 11. பாம்படி, 12. தொட்டமநெ அட்டி, 13. தேனாடு, 14. கெங்கரெ, 15. கோடநாடுமந்து, 16. பெட்டுமந்து, 17. கீயெ கோக்கால், 18. அக்கால், 19. பெப்பேநு, 20. கூக்கல், 21. ஒந்நதலெ, 22. கக்குச்சி, 23. எப்பநாடு, 24. சிந்நகுந்நூர், 25. கடநாடு, 26. சோலூர், 27. தூடெகுய் (ஏக்குணி) 28. கீயகூர், 29. தங்காடு, 30, காட்டேரி, 31. தாம்பட்டி, 32. மேலகூர், 31. அதிக்கரட்டி, 32. கொல்லிமலெ, 33. கீயெகுந்தெ, 34. மேல்குந்தெ, 35. கிண்ணகொரெ, 36. இரியசீகெ. எப்படியாயினும் இவை அனைந்தும் முதலில் குறிப்பிட்ட பதினைந்து எத்தப்பாகள் அமைத்த அக்க பக்காகளுக்குள் அடங்கும். இந்த எத்தப்பாகள் வெவ்வேறு காலக்கட்டங்களில் ஊர் அமைத்துள்ளனர்.

தவசம், குறிப்பாகச் சிறு தவச விளைச்சல், பலர்கூடி பொதுவாக வேளாண்மையில் செயல்படுதல் ஆகியவை இருந்தபோது அக்க பக்காவின் செயல்பாடு பொருள் உள்ளதாக இருந்தது. இன்றைய நிலையில் தவச விளைச்சலும் இல்லை; கூட்டாகச் சேர்ந்து வேளாண்மை செய்வதும் இல்லை. ஆகையால் இனி புதியதாக அக்க பக்கா உருவாவதற்கு வாய்ப்பு இல்லை.

அக்க பக்கா இல்லாதது ஊர் தகுதியைப் பெறாது. ஆக இனி புதியதாக ஊர் அமைவதற்கும் இடம் இல்லை.

ஒரு காலத்தில் பெரும்பான்மை ஒர் அட்டியில் ஒரு முன்னோர் வழிப்பட்ட மக்களே இருந்தனர். பெண்ணுக்குச் சொத்துரிமை போன்ற காரணமாக இப்பொழுது இவ்வாறு ஒரே எத்தப்பன் வழிப்பட்ட மக்கள் இருக்கும் அட்டி என்று எதையும் சொல்ல இயலாது. இந் நிலையில் ஊர் அமைத்தவர், நட்ட மக்கள் என்னும் பாகுபாட்டுரிமை முன்னர் இருந்த அளவிற்கு இப்பொழுது வலுவானதாக இல்லை என்பதைக் கவனிக்க வேண்டும். ஆனால் முன்னர் குறிப்பிட்ட பதினைந்து எத்தப்ப மக்கள் பிரிவுகளுள் ஒரு பிரிவு மக்களுக்கு மற்ற பதினான்கு பிரிவினர் நட்ட மக்கள். இது திருமண உறவுக்குக் கொள்ளப்படும் பிரிவுகளாக இருப்பதால் இதை உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும். இதை எல்லோரும் அறியுமாறு பரப்ப வேண்டும். சமுதாய அளவில் ஒரு குலத்தினர் மட்டும் வாழ்ந்த பகுதி சீமை என்றும் ஒன்றுக்கும் மேற்பட்ட குலத்தினர் இருந்த பகுதி நாடு என்றும் குறிப்பிடும் நிலை முன்னர் இருந்துள்ளது.

கோயிலைக் குறிக்கும் படகுச்சொல் குடி. இச்சொல் அடிப்படையில் வீடு என்னும் பொருள் உடையது. படகர்க்கு எத்தப்பன் வீடே முதன்மையான கோயில் என்பதை இச் சொல் காட்டுகிறது. வாழும் வீட்டை இறைவன் இருக்கும் கோயிலாக ஆக்க வேண்டியதையே முன்னோர் வலியுறுத்தி வந்துள்ளனர். வீட்டைக் கோயிலாக்கி வெளிச்சத்திற்காக ஏற்றிய விளக்கை வணங்கிச் சமையலுக்காக எரித்த உலைச் சாம்பலைத் திருநீறாகப் பூசி தங்கள் இறையுணர்வைப் போற்றி வந்துள்ளனர். குடிகோபுர என்னும் இணைமொழி கோபுர என்பது கோயிலிலிருந்து தனியானது என்பதை உணர்த்துகிறது. குடியை (வீட்டை)க் கோயிலாக்கி வாழ்ந்த முன்னோர் இறையுணர்வைக் காட்டிலும் கோபுரம் அமைத்து வீணே பாடுபடும் இன்றைய மக்களின் இறையுணர்வு எவ்வகையில் சிறந்தது?

இறை வழிபாடு என்ற பெயரில் நான் என்னும் உணர்வும் போட்டிப் பொறாமையும் தலை தூக்க இடந்தரலாமா? இறையுணர்வு மனத்தைப் பண்படுத்தும். பண்பட்ட மனத்தில் தான் இறையுணர்வு உண்டாகும் என்பதில் ஐயம் இல்லை. இவ் வகையில் பெரும்கோயில் அமைத்து நம் இறையுணர்வைப் பெருக்குவோம் எனச் செயல்படுவதில் பயன் எதுவும் விளையப் போவது இல்லை. பெரிய அளவில் கோயில் அமைத்து விமரிசையாகப் பண்டிகை கொண்டாடுவதில் பொருள்செலவும் வீண் அலைச்சலும் தான் மிஞ்சும்.

இன்றைய நிலையில் இனக்குழு ஆட்சி முறையில் செயல்படவிருப்பது சட்டத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டியது தேவை. அவ்வகையில் வழக்குகளின் சமுதாயப் பங்கு மிகக் குறைந்ததாகவே இருக்கிறது. என்றாலும் கருத்து வேறுபாடு காரணமாகப் பல இடங்களில் கட்சிகள் ஏற்படுகின்றன. இவையும் பல நேரங்களில் வழக்குகளாக முறைமன்றத்திற்குச் செல்கின்றன. இந்நிலையில் இனக்குழு ஆட்சிமுறையின் வரையறை மாற்றலுக்கு உள்ளாகி வருகின்றது.